உ

கடவுள்துணை.

மதுரை கூடலூர்கிழார்

அருளிச்செய்த

# முதுமொழிக்காஞ்சி

## மூலமும்,

மஹாவித்வான் - கா. இராமசாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

## விருத்தியுரையும்.

இவை

பேன்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1910.

விலை அணா 2½.

Copyright]

[Registered.

உ

கடவுள் துணை.

## மதுரை கூடலூர்க்கிழார்

அருளிச்செய்த

# முதுமொழிக்காஞ்சி.

அஃதாவது அறிவுடையோர் குற்ற நீக்கி யாராயும் உலகத்திய லுள் முடிந்த பொருளாகிய அறம்பொரு ளின்பங்களை விளங்கக் கூறுவதாம். காஞ்சியென்பதற் கிலக்கணம் "பாங்கருஞ் சிறப்பின்" என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் "வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினது காஞ்சியாயிற்று" என நச்சினார்க்கினியர் கூறியிருத்த லறிக. முதுமொழிக்காஞ்சி யென்பது முதுமை மொழி காஞ்சி எனப் பிரிபடும். முதுமை - பழைமை, மொழி - சொல், காஞ்சி - ஊன்றல், (அஃதாவது வற்புறுத்திக் கூறல்) எனவே முதுமொழிகளைக் கொண்டு அற முதலியவற்றை வற்புறுத்திக் கூறல் முதுமொழிக்காஞ்சி யென்றாயிற்று. இது தன்னையுணர்த்தும் நூலுக்காதலின் காரியவாகுபெயர். அன்றித் தனக்கிடமாகிய நூலின்மே னிற்றலின் தானியாகு பெயருமாம். காஞ்சி பலவகைப்படு மென்பதைப் புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றா லறிக. முதுமொழி யென்பது பண்புத்தொகை நிலைத்தொடர். மொழிக்காஞ்சி யென்பது மூன்றும் வேற்றுமையுருபும் பயனு முடன்றொக்கதொகை.

## இம் முதுமொழிக்காஞ்சியின்

**ஆசிரியர்:**—மதுரை-கூடலூர்க்கிழார்.

**இடம்:**—கூடலூரென்னும் பதிக்கண் பிறந்து மதுரையில் வசித்திருந்தவர்.

**காலம்:**—கடைச் சங்கத்தாரது காலம்.

**ஜாதி சமயம்:**—இவருக்குக் கிழாரென்னும் பெயரிருத்தலி னிவரை வேளாளரென்று சிலரும் வைசியரென்று சிலருங்

கூறுவர்; கிழாரென்றபெயர் இருவருக்கு முரியதாதலின் சமய மின்னதெனத் தெரியவில்லை.

**இவருடனிருந்த புலவர்கள்:—** அரிசிற்கிழார், ஆலத்தூர்க்கிழார் ஆவூர்க்கிழார், இடைக்குன்றூர்க்கிழார், நக்கீரர், ஔவை, கபிலர் முதலானோர்.

**இவரியற்றிய வேறு நூல்கள்:—** இவரிந்நூலன்றி வேறு நூலிய ற்றவில்லை யாயினும் எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவதாகிய குறுந்தொகையுள் 166-வது 'தண்கடற் படு திரை பெயர்த்தலின் வெண்பறை" என்கிற பாடலும், 167-வது "முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்"என்கிற பாடலும், 214-வது "மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து விக்கிய" என்கிற பாடலும், எட்டாவதாகிய புறநானூற்றுள் 229 ஆகிய "ஆடியழலற்குடத்து" என்கிற பாடலும் பாடியிருக்கின்றனர்.

**விசேஷங்கள்:—** இவர் கடைச்சங்கப்புலவர் நாற்பானென்ப தின்ம ருடனிருந்து கவிபாடிய நானூற்று நாற்பானென்ப தின்மரி லொருவரெனத் தெரிகின்றது.

இவ்வாசிரியரா லியற்றப்பட்ட இந்நூல் பதினேண்கீழ்க் கணக்கு நூல்களு ளொன்றாகும். பதினேண்கீழ்க் கணக்காவன:—நாலடி, நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியதுநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணையொழியைம்பது, திணைமாலைநூற்றைம்பது, முப்பால், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை யென்பனவாம். குறைந்த வடிகளுடன்கூடி அறம்பொருளின்பங்களைக் கூறுநூல் கீழ்க்கணக் கெனப்படும்.

---

உ

கடவுள் துணை.

# முதுமொழிக்காஞ்சி

## மூலமும் உரையும்.

### 1. சிறந்தபத்து.

சிறப்புடைய பத்து விஷயங்கள் என்பது அதன்பொருள். சிறந்த பெயரெச்சமாதலின் வருமொழி வல்லொற்று மிகாதாயிற்று. பத்து-எண்ணலளவையாகுபெயர். சிறந்தனவாகிய பத்துவிஷயங்க ளென்புழிச் சிறந்த என்பது அன்சாரியை குறைந்த உடன்பாட்டுத் தெரிநிலை வினையாலணையும் பெயராம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

(பதவுரை.) ஆர்கலி உலகத்து - கடல் சூழ்ந்த உலகத்தில் (உள்ள), மக்கட்கு எல்லாம் - மக்களியாவருக்கும், ஓதலின் - (நன்னூல்களைப்) படித்தலைப்பார்க்கினும், ஒழுக்கம் உடைமை-(தம் தம் வருணாச்சிரமத்திற்கு ஏற்ற) நல்லொழுக்கமுடைத்தாயிருத்தல், சிறந்தன்று - சிறப்புடையதாம், என்றவாறு.

(விருத்தியுரை.) ஒருவன் கல்வியுடையவனா யிருத்தலைப் பார்க்கினு மொழுக்கமுடையனா யிருத்தல் சிறந்த தென்பதாம். "கற்க

கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்றபடி கல்விக்குப் பயன் ஒழுக்கமுடைமையாம். அவ்வொழுக்கமில்லாவிடின் கற்றதனுற் பயனில்லை என்பதும், "நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க, மென்று மிடும்பை தரும்" என்றதனுலும், "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்றதனுலுமறிக. மக்கட்கெல்லாம் எனப் பொதுமையிற் கூறினமையின் ஆண் பெண் என்னும் இருபாலாருமோதுதற் குரியா ரென்பது பெறப்பட்டது. ஆர்கலி: நிறைந்த ஓசையையுடையது எனப் பொருள்படுதலின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணக்குறி. ஓதல் - தொழிற்பெயர். ஓதலின் என்பதன்கணுள்ள இன் உருபு உறழ்ச்சிப்பொருளது. உறழ்ச்சி ஒன்றின் ஒன்றை மிகுத்துக்கூறுதல். இஃது எல்லைப்பொருளின்பாற்படும். உடைமை-குறிப்புத் தொழிற்பெயர், அதன் பொருள் உடைத்தாயிருத்தலென்பது. சிறந்தன் றென்பதில் அன் து சாரியை. ஒழுக்கம்-அம்மீற்றுத் தொழிற்பெயர்; பகுதி ஒழுகு; இதன் பொருள் நல்லோர் விதித்தவா றுசரித்துவருத லென்பது. உலகத்து என்பதில் அத்துச்சாரியை. எல்லாம்-மூவிடப்பொதுப்பெயர்.

(பழையவுரை.) கடல் சூழ்ந்த வுலகத்து மக்கட் கெல்லாம் ஓதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை என்றவாறு.

(2) காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.

(ப-ரை.) காதலின் - (ஒருவன் பிறரிடத்து வைத்திருக்கும்) அன்புடைமையைப் பார்க்கினும், கண் அஞ்சப்படுதல் - (அவர் வருந்துவதைக்) கண்டு (தான்) அஞ்சுதல், சிறந்தன்று—, எ - று.

(வி-ரை.) ஒருவன் பிறரிடத் தன்புடையவனு யிருத்தலினும் அவர் வருந்துதலைப் பார்த்தஞ்சுதல் சிறந்த தென்பதாம். கண்ணென்பது கண்டென்பதன் றிரிபு; கைமிகல் என்முற்போல உபசர்க்கமுமாம். அஞ்சப்படுத லென்னுஞ் செயப்பாட்டு வினைத்தொ

ழிற்பெயர் அஞ்சுதல் என்னுஞ் செய்வினைத் தொழிற்பெயரின் பொருளில் வந்தது. உவப்பிற்கேது காதலெனப்படும்.

(பழையவுரை.) பிறர் தன்மேற் செய்யுங் காதலினுஞ் சிறந்தது மற்று அவராற் கண்ணஞ்சப்படுதல், எ-று.

(3) மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.

(ப-ரை.) மேதையின் - (மேலுமேலு மொருவன் பல நூல்களைக் கற்று) அறிவுடையனாதலைப் பார்க்கினும், கற்றது - (தான் நல்லாசிரியன் மாட்டுக்) கற்ற நூற்பொருள்களை, மறவாமை - மறவாதிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி - ரை.) படித்தவற்றை மறவாமலிருப்பது மேலுமேலும் படித்தலினும் சிறப்புடையதென்பதாம். மேதை - அறிவு; பண்புப்பெயர்; அஃதீண்டு ஆகுபெயர். கற்றது-வினையாலணையும் பெயர். மேதைக்கு மூரண்மொழி பேதையாம்.

(பழையவுரை.) தானாக ஒன்றை மதியுடைமையான் அறியும் அறிவினும் மிக்க சிறப்புடைத்து தான் கற்றதனைக் கடைப்பிடித்திருத்தல், எ-று.

(4) வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.

(ப-ரை.) வண்மையின் - (ஒருவன்) ஈகையுடையனா யிருத்தலைப் பார்க்கினும், வாய்மை உடைமை - உண்மை யுடையவனா யிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஒருவன் உண்மை பேசுபவனாயிருத்தல் ஈகையினுஞ் சிறந்ததென்பதாம். "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற" என்றார் திருவள்ளுவனாரும். வாய்மை சொற்றவறாமையுமாம். ஈகை - கைம்மாறு கருதாது தருதல். வாய்மை யென்பதின் மை பகுதிப்பொருள்விகுதி; அது

வாயிற்றேன்றுஞ்சொல்லுக்காதலின் கருவியாகுபெயர். அஃதீண்டுக் கீரைத் தண்டென்பதுபோன் றுண்மை யுரைத்தலின்மே னின்றது.

(பழையவுரை.) செல்வத்தினும் மிக்க சிறப்புடைத்து மெய் யுடைமை, எ-று.

(5) இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை.

(ப-ரை.) இளமையின் - (ஒருவன்) இளமைப்பருவமுடையனு யிருத்தலைப் பார்க்கினும், மெய் - உடம்பின்கண், பிணி இன்மை - நோயின்றி யிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) நோயின்றியிருத்தல் இளமைப்பருவ முடைத்தாயிரு த்தலினுஞ் சிறப்புடைய தென்பதாம். "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்பதீண்டறியத் தக்கதாம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல் வம்" என்பதன் சிறப்பை யுணர்க. மெய்யென்பதீண்டு மங்கலவழ க்கா யுடம்பின்மே னின்றது; அஃதசித்த பதார்த்த மாதலின். அன்றி மெய்யாகிய வுயிரிருத்தற் கிடமா யிருத்தலின் தானியாகு பெயரென்றுங் கொள்ளலாம். பிணி-வினைமுதற் பொருளை யுணர்த் தும் இகரவிகுதி புணர்ந்து கெட்ட தொழிற்பெயர்; அதன்பொருள் பிணிப்ப (கட்டுவ) தென்பது. பிணியுடையார் தாம் கருதியவா றெழுகாமையையறிக. இன்மை-குறிப்புத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) இளமையினும் மிக்க சிறப்புடைத்து உடம்பு நோயின்மை, எ-று.

(6) நலனுடைமையி னாணுச் சிறந்தன்று.

(ப-ரை.) நலன் உடைமையின் - (ஒருவன்) அழகுடையவனு யிருத்தலைப் பார்க்கினும், நாணு - நாண (வெட்க) முடைத்தா யிரு த்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) வெட்கமுடைமை யொருவனுக்கழகினுஞ் சிறந்ததாமென்பது. "இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச், செப்பமும் நாணு மொருங்கு" என்றும், "ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்றும், இழுக்கார் குடிப்பிறந் தார்" என்றும், "அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு, ஐந்துசால் பூன்றிய தூண்" என்றும், "நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின், வேண்டுக யார்க்கும் பணிவு" என்றும் திருவள்ளுவர் கூறுமாறறிக. "காமுற்ற பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை என்பதுகாண்க. நீலமென்பது நீலென்றானாற்போல் நாணமென்பது கடைக்குறைந்து நாணென்றாய் உகரச்சாரியைப் பெற்று நாணுவென்றாயிற்று. இது நாணுதலென்றும் வரும்.

(பழையவுரை.) அழகுடைமையினும் மிக்க சிறப்புடைத்து நாணுடைமை, எ-று.

## (7) குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று.

(ப-ரை.) குலன் உடைமையின் - (ஒருவன்) உயர்குடியிற் பிறந்திருத்தலைப் பார்க்கினும், கற்பு-கல்வியறிவுடையனாயிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) குலன் குலமென்பதன் போலிமொழி; இது கடைப் போலி. ஒருவன் மேன்மையடைதற்குக் கல்வியறிவுடைமை காரணமாவதன்றி, அவனது உயர்குடிப்பிறப்புக் காரணமாகா தென்பதாம். இதனை "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்றாரனைத்திலர் பாடு" என்கிற திருக்குறளும், "எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும், அக்குடியிற் கற்றோரை வருகென்பார்" என்ற நறுந்தொகையினும் காண்க. குலன் உடைமையின்-ஒருத்தி யுயர்குடிப்பிறப்புஉடையவரையிருத்தலைப் பார்க்கினும், கற்பு-அவள் கற்புடையவளாயிருத்தல், சிறந்தன்று—, என வேறு பொருள் கொள்ளினுமாம்.

(பழையவுரை.) நல்ல குலனுடைமையினும் கல்வியுடைமை சிறப்புடைத்து, எ-று.

(8) கற்றலிற் கற்றுரை வழிபடுதல் சிறந்தன்று.

(ப-ரை.) கற்றலின் - (ஒருவன் நன்னூல்களைக்) கற்றலைப் பார்க்கினும், கற்றுரை - கல்வியறிவுடையாரை, வழிபடுதல் - வழிபட்டொழுகுதல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) கற்றுரை வழிபட்டு, அவருடனிருந் தொழுகுபவர்க்குப் பலவகைப்பட்ட கல்வியறிவுந் தாமே யுண்டாமென்பதாம். துரோணாது பிம்பத்தைப் பிரதிட்டைசெய்து பூசித்து வந்த ஏகலைவனென்ற வேடனுக்கு அக்குருபக்தியால் வில்வித்தை முழுவதும் கைகூடியமை, இதற்குத் திருஷ்டாந்தம். "கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்" என மேல் தண்டாப்பத்திலிருந்துணர்க. கற்றூர் - வினையாலணையும்பெயர். ஈண்டுக் கற்றவராவார்: அறம்பொருளின்பம் வீடுகளைப் பயக்கு நூல்களை யையந்திரிபறக் கற்று அவற்றை நன்மாணுக்கர்க் குணர்த்துதற் குரியார்.

(பழையவுரை.) தான் ஒன்றைக் கற்கு மதனினுஞ் சிறப்புடைத்து கற்றுரை வழிபாடு செய்தல், எ-று.

(9) செற்றுரைச் செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று.

(ப-ரை.) செற்றுரை - (தன்னை) வருத்தியவரை, செறுத்தலின் - (தான்மாறுகத் துணைவலி நேரிட்டகாலத்து) வருத்துதலைப் பார்க்கினும், தன் செய்கை - தன்னைச் செப்பமுடையவனுக்கிக் கொள்ளுதல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஈண்டுச் செப்பமுடைமையாவது-தன்னை வருத்தினவரை வருத்தாது அவர்க்கிதமானவற்றைப் புரிந்து அவரை நாணுமாறு செய்வித்தல். "இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண

நன்னயஞ் செய்து விடல்'' என்றார் திருவள்ளுவனார். செற்றார்-வினையாலணையும்பெயர். செறுத்தல் - தொழிற்பெயர், பகுதி செறு.

(பழையவுரை.) பகைவரைச் செறுத்தலினும் மிக்க சிறப்புடைத்து, தன்னைப் பெருகச்செய்தல், எ-று.

(10) முற்பெரு கலிற்பிற் சிறுகாமை சிறந்தன்று.

(ப-ரை.) முன் பெருகலின் - முன்னே (ஒருவன் செல்வத்தால் மேலுமேலும்) விருத்தியாதலைப் பார்க்கினும், பின் சிறுகாமை - (உள்ளசெல்வம்) பின்னே குறையாதிருத்தல், சிறந்தன்று—, எ - று.

(வி-ரை.) செல்வம் மேன்மேலும் விருத்தியாதலைப் பார்க்கினும் உள்ள செல்வம் குறையாதிருத்த லொருவனுக்கு நலமா மென்பதாம். முன்பின் னென்பன இடத்தை யுணர்த்தாது காலமுணர்த்திய பண்புச்சொற்கள். இடைச்சொற்க ளென்பாருமுண்டு. இவற்றினுதிரூபம் முன்மை பின்மை யென்பன. இவை முன் பின்னென வருதலே யன்றி, முன்னே பின்னே, முன்பு பின்பு, முன்னர் பின்னர், முன்னை பின்னை யென்றற்றொடக்கத்தனவாகவும் வரும்.

(பழையவுரை.) செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின் அழிதலின் நின்ற நிலைமையிற் சிறுகாமை சிறப்புடைத்து, எ-று.

சிறந்தபத்து முற்றிற்று.

## 2. அறிவுப்பத்து.

அறிதற்குரியவாகிய பத்துவிஷயம், அறிவதாகிய பத்து விஷய மெனினுமாம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரிற் பிறந்தமை யீரத்தி னறிப.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்திலுள்ள மக்களியாவருள்ளும், பெருமையில் பிறந்தமை - (ஒருவர்) பெருங்குடியிற் பிறந்திருத்தலை, ஈரத்தின் - (அவர் பிராணிகளிடத்து வைத்திருக்கும்) அன்பினல், அறிப-(மேலோர்) அறிவார்கள், எ-று.

(வி-ரை.) ஒருவர் பெருங்குடியிற் பிறந்தா ரென்பதை யவர் பிராணிகளிடத் தன்புடையரா யிருத்தலினு லறியலா மென்பதாம். "நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக், குலத்தின்க ணையப் படும்" எனத் திருவள்ளுவர் கூறியதுங் காண்க. ஈரத்தின் என்பதன்கணுள்ள ஐந்தனுருபு ஏதுப்பொருளது. பேர் - பெருமை யென்பதன் விகாரம். பெருங்குடி - உயர்குடி. அறிப - பகரவீற்றுப் பலர் பால் வினைமுற்று.

(பழையவுரை.) கடல்சூழ்ந்த வுலகத்து மக்களெல்லாருள்ளும், ஒருவன் பெருங்குடியிற் பிறந்தமையை அவன் ஈரமுடைமையானே அறிவர், எ-று.

(2) ஈர முடைமை யீகையி னறிப.

(ப-ரை.) ஈரம் உடைமை - (ஒருவர் பிராணிகளிடத்து) அன்புடைத்தா யிருத்தலை, ஈகையின் - (தம்மை யாசித்தவர்க்குத் தம்மிடத் துள்ளதை இல்லை யென்னுது) கொடுத்தலினல், அறிப—, எ - று.

(வி-ரை.) ஒருவர் ஜீவர்களிடத் தன்புடையராயிருத்தல் அவரது கொடையாலறியப்படு மென்பதாம். "அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்" என்றபடி அருளில்லாதவர் அறஞ்செய்தலின்றாம். ஈகை - கையீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) ஒருவன் மனத்தின்கண் ஈரமுடையா னென்பதனை அவன் பிறர்க்குக் கொடுக்குங் கொடையினுனே அறிவர், எ - று.

(3) சோரா நன்னட் புதவியி னறிப.

(ப-ரை.) சோராத நல் நட்பு - (எக்காலத்துந் தம்மிடத்தொருவர் வைத்துள்ள) மறத்தலின்றிய சிறந்த சினேகத்தை, உதவியின் - (தமக்காபத்து நேரிடுங்காலத்துச் செய்யும்) உதவியினுல், அறிப—, எ - று.

(வி - ரை.) மறவாத சினேகம் ஆபத்து நேரிடுங்காலத்துச் செய்யு முதவியினு லறியப்படு மென்பதாம். "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு" என்றார் திருவள்ளுவனாரும். சோரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நட்பு - பண்புப்பெயர், பகுதி - நள். உதவி-தொழிற்பெயர்; விகுதி இ.

(பழையவுரை.) ஒருவன் தப்பாத கடைப்பிடியுடைய நல்ல நட்பினையுடைய னென்பது, அவன் நட்டார்க்குச் செய்யும் உதவியினுனே அறிவர், எ - று.

(4) கற்ற துடைமை காட்சியி னறிப.

(ப-ரை.) கற்றது உடைமை - (ஒருவர்) கல்வியறிவுடைத்தாயிருத்தலை, காட்சியின் - (அவரது வார்த்தையின்) பொலிவினுலே, அறிப—, எ - று.

(வி-ரை.) கற்றவரை அவரது சொற்பொலிவா லறியலா மென்பதாம். "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனை யவர்" என்றார் நாயனார். கற்றது - வினையாலணையும்பெயர். காட்சி - தொழிற்பெயர்; பகுதி காண். பொலிவு - விளங்கிய அறிவுடைமையைக் காட்டுந் தன்மை. காட்சியினென்பதற்கு முகவிளக்கத்தினாலென்றுங் கூறலாம்.

(பழையவுரை.) ஒருவனது கல்வியை அவன்தன் அறிவினாலே அறிவர், எ-று.

(5) ஏற்ற முடைமை யெதிர்கோளி னறிப.

(ப-ரை.) ஏற்றம் உடைமை - (ஒருவர்) மேன்மை யுடைத்தா யிருத்தலை, எதிர்கோளின் - (பிறரை) எதிர்கொண் டழைப்பதனால், அறிப—, எ-று.

(வி-ரை.) கல்வி கேள்வி முதலியவற்றால் ஒருவர் மேன்மை யுடையராயிருத்தலை அவர் பிறரை எதிர்கொண் டுபசரிப்பதனா லறியலாமென்பதாம். இதனை "இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை, விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார், குன்றா வொழுக்க மாக் கொண்டார் கயவரோ, டொன்றா வுணரற்பாற் றன்று" என்பதனாலறிக. எதிர்கோளின் என்பதில் எதிர்கொள் பகுதி; இது விகாரப்பட்டு எதிர்கோளென்றாயிற்று. கண்ணன் தூது சென்றபோது பீஷ்மாதியோ ரெதிர்கொண்டவாறறிக. எற்றமுடைமை என்றும் பாடம்.

(பழையவுரை.) ஒருவன் ஆராய்ந்து துணியவல்லனென்பதனை, அவன் முற்கொண்டு பாதுகாக்குங் காப்பானே அறிவர், எ-று.

(6) சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப.

(ப-ரை.) சிறுமை இல் பிறந்தமை - (ஒருவன்) இழிகுடியிற் பிறந்திருத்தலை, பெருமித்தின்-(அவனது) செருக்கினால், அறிப—, எ-று.

(வி-ரை.) ஒருவன் இழிகுடியிற் பிறந்திருத்தலை அவனது செருக்கா லறியலா மென்பதாம். செருக்கு - கர்வம், அது பெரியாரைப் பணியாமை முதலியனவாம். இழிகுடி - வம்சாவளியின்றிய மரபு. "சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப், பேணிக்கொள்வே மென்னும் நோக்கு", "பணியுமா மென்றும் பெருமை சிறுமை, யணியுமாந் தன்னை வியந்து" என்பதுகுறள்.

(பழையவுரை.) சிறுமையுடைய குடியின்கட் பிறந்தானென்பதனை அவன் செருக்கினனே அறிவர், எ-று.

## (7) குத்திரஞ் செய்தலிற் கள்வனாத லறிப.

(ப-ரை.) குத்திரம் செய்தலின் - (ஒருவன்) வஞ்சகச்செய்கையுடைத்தா யிருத்தலினால், கள்வன் ஆதல் - (அவன்) திருடனாகவிருத்தலை, அறிப—, எ-று.

(வி-ரை.) ஒருவன் திருடனா யிருத்தலை அவனது வஞ்சகச் செயலா லறியலா மென்பதாம். வஞ்சகச் செய்கை - மாறுபாடான செய்கை. கள்வன் என்பதில் கள்-பகுதி, வ்-பெயரிடைநிலை, அன் உயர்திணையாண்பால்விகுதி, ஆதல்-குச்சாரியை தொக்க தொழிற் பெயர்.

(பழையவுரை.) ஒருவனை ஒருவன் படிறுசெய்யும் படிற்றால் அவன் கள்வனாதல் அறிவர், எ-று.

## (8) சொற்சோர் வுடைமையி னெச்சோர்வு மறிப.

(ப-ரை.) சொல் சோர்வு உடைமையின் - (ஒருவன் சொல்லுஞ்) சொல்லிற் றவறுடைத்தாயிருத்தலினால், எ சோர்வு உம் - (அவனது) எல்லாத் தவறுகளையும், அறிப—, எ-று.

(வி-ரை.) ஒருவனது தவறுகளை அவனது மாறுபாடுள்ள சொல்லா லறியலா மென்பதாம். "ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்,

காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு" என்றார் திருவள்ளுவனார். "சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிது" என்பது இனியவை நாற்பது. எச்சோர்வு மென்பது அடைக்கலம் வைத்த பொருளை யபகரித்தல், அடுத்தாரைக் கெடுத்தல், பிறரையடுத்துக் கெடுத்தல் முதலியனவாம். சோர்வு வுவ்விகுதித் தொழிற்பெயர்.

(பழையவுரை.) சொற்சோர்வுபடச் சொல்லுதலான், அவனுடைய எல்லாச் சோர்வையும் அறிவர், எ-று.

(9) அறிவுசோர் வுடைமையிற் பிறிதுசோர்வு மறிப.

(ப-ரை.) அறிவு சோர்வு உடைமையின் - (ஒருவன்) அறிவு சோர்ந்திருத்தலினால், பிறிது சோர்வும் - (அதனின்) வேறாய (அவனது) உடலின் றளர்ச்சியையும், அறிப—, எ - று.

(வி-ரை.) அறிவின் சோர்வினால் உடலின் சோர்வை யறியலா மென்பதாம். சோர்தல்-விளக்கமின் றியிருத்தல். அறிவு-வுவ்விகுதித் தொழிற்பெயர்; பண்புப்பெயருமாம். பிறிதென்பது ஈண்டு இனம் பற்றி யுடம்புக்காயிற்று.

(பழையவுரை.) ஒருவன் தன் அறிவின்கண் சோர்வுடைமையின், எல்லாச் சோர்வுமுடையனென்பது அறிவர், எ-று.

(10) சீருடை யாண்மை செய்கையி னறிப.

(ப-ரை.) சீர்மை உடைய ஆண்மை - (ஒருவரது) சிறப்புடைய வீரத்தை, செய்கையின் - (அவர் போர்முகத்தஞ்சாது போர்புரியும் வீரச்) செயலாலே, அறிப—, எ - று.

(வி-ரை.) ஒருவரது ஆண்மை அவரஞ்சாது செய்யும் செயலா லறியப்படு மென்பதாம். சீர்மை என்பதில் மை விகுதியும் உடைய என்பதின் அகரவிகுதியும் தொக்குநின்றன. உடைய - உடன்பாட்டுக் குறிப்புப்பெயரெச்சம். ஒவ்வொன்றும் ஒவ்வொன்றா லறியப்

படுவதா யிருத்தலின் இப்பத்து ஞாபகவேது வணியாம். ஞாபகம் - அறிவிப்பது.

(பழையவுரை.) ஒருவன் புகழுடைய ஆள்வினைத்தன்மையை அவன் செய்கையான் அறிவர், எ-று.

அறிவுப்பத்து முற்றிற்று.

---

## 3. பழியாப்பத்து.

பழியாதபத்து விஷயம்; பழியாமை-நிந்தியாமை. பழியா - ஈறுகெட்ட வெதிர்மறைத் தெரிநிலைப்பெயரெச்சம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
யாப்பி லோரை யியல்புகுணம் பழியார்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், யாப்பு இல்லோரை - கட்டுப்பாட்டிற்கடங்காது நடப்பவரை, இயல்பு குணம் - (அவர்க்கு) இயற்கையாயுள்ள தீக்குணத்தைப்பற்றி, பழியார் - (அறிவுடையோர்) பழித்துக் கூறார், எ - று.

(வி-ரை.) உலகத்தோடொத்து நடவாதவரை அவரது தீவினையைக் கருதி யறிவுடையோர் பழியா ரென்பதாம். கட்டுப்பாட்டிற் கடங்கல் - மேலோ ரொழுகியவா றொழுகல். இயல்புகுணம் - அறிவுடையோர் யாதுரைக்கினும் மாறாதுள்ள பிறவித் தீக்குணம். யாப்பு-புவ்விகுதித் தொழிற்பெயர்.

(பழையவுரை.) கடல்சூழ்ந்த வுலகத்து மக்களெல்லாருள்ளும், ஒரு செய்கையின்கண்ணும் நிலையில்லாதா ரியற்கையாகிய குணத்தை யாவரும் பழியார், எ - று.

(2) மீப்பில் லோரை மீக்குணம் பழியார்.

(ப-ரை.) மீப்பு இல்லோரை - மேன்மை யில்லாதவரை, மீ குணம் - (அவர்) வெளிப்படக்காட்டும் (பேதைமைக்) குணத்தைப் பற்றி, பழியார்—, எ-று.

(வி-ரை.) மேன்மையில்லாதவர் தம்மிடத்து மேன்மை யிருப் பதுபோற் காட்டுவதைக் கண்டு அவரை மேலோர் பழியா ரென்ப தாம். இதனை "சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப், பேணிக் கொள்வேமென்னு நோக்கு" என்பதனாலுமறிக. மீக்குணமாவது, ஒருவன் மேன்மை தன்னிடத் தில்லாதிருக்கவும் அது தன்னிடத் துள்ளது போன்று நடிக்குந் தன்மை.

(பழையவுரை.) மேன்மைக்குண மில்லாதார் மேன்மை செய் யாமையை யாவரும் பழியார், எ-று.

(3) நிறையச் செய்யாக் குறைவினை பழியார்.

(ப-ரை.) நிறைய செய்யா - ஒருவன் முன்னரே யாலோ சித்து முற்றுப்பெறச் செய்யாத, குறைவினை - குறைபாடுடைய காரியத்தைப்பற்றி, பழியார்—, எ-று.

(வி-ரை.) குறைவினை - செய்யுமாறு மேற்கொண்ட கருமம் முற்றுப்பெறுமை. ஒருவர் நன்காலோசியாது தொடங்கிய காரிய முடியாமையைப்பற்றி மேலோர் பழியா ரென்பதாம். "பொறியின் மை யார்க்கும் பழியன் றறிவறிந், தாள்வினை யின்மை பழி' என் பது காண்க.

(பழையவுரை.) ஒரு வினையை நிரம்பச் செய்யாததற்கு முன் பே அக்குறைவினையை யாவரும் பழியார், எ-று.

(4) முறையி லரசர்நாட் டிருந்து பழியார்.

(ப-ரை.) முறையில் - நீதியில்லாத, அரசர் நாடு - அரசர்களது தேசத்தில், இருந்து - வசித்து, (அவ்வரசரையே) பழியார்—, எ-று.

(வி-ரை.) நீதிதவறிய அரசர் தமது குற்றத்தை யெடுத்துக் கூறித் திருத்து மறிவுடையோரைத் தண்டித்தல் நிச்சயமாதலின் அவர் அவனது தேசத்திலிருந்து அவனைப் பழியா ரென்பதாம். நாடு எனும் நெடிற்றொடர்க் குற்றியலுகரமொழி டகரவொற் றிரட்டி நாட்டு என்றாயிற்று.

(பழையவுரை.) நடுவு செய்யாத அரசர் நாட்டின்கணிருந்து அவ்வரசர் நடுவு செய்யாமையை யாவரும் பழியார், எ-று.

(5) பெருமை யுடையத னருமை பழியார்.

(ப-ரை.) பெருமை உடையதன் - (யாவரும் விரும்பும்) மகத்துவமுடைய பொருளினது, அருமை-(கிடைத்தலின்) அருமையைப் பற்றி, (அதனைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) பெருமையுடைய பொருள் தமக்குக் கிட்டாமை பற்றி அதனை மேலோர் பழியா ரென்பதாம். "அருமை படைத்தென்ற சாவாமைவேண்டும்,பெருமை முயற்சிதரும்", "பெருமையுடையவ் வாற்றுவா ராற்றி, னருமை யுடைய செயல்" என்றார் திருவள்ளுவரும். பலபிணியைத்தீர்க்கு மருந்தொன்று தமக்குக்கிட்டுவதருமையாயினும் அது தங்களுக்குக் கிட்டவில்லையே யென்று அதனைப் பழிப்போ ரொருவரு மில்லாமை காண்க. இங்ஙனமே உயர்வுள்ளன வான ஏனைய பொருள்களிலுங் கொள்க. உடையது - உடைமை யென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) பெருமையுடைய தொன்றனை முயன்று முடித்துக்கொள்கை அரிதென்று அதனைப் பழித்து முயற்சி தவிரார்.

(6) அருமை யுடையதன் பெருமை பழியார்.

(ப-ரை.) அருமை உடையதன்-(கிடைத்தற்கு) அருமையுடைய பொருளினது, பெருமை - மகத்துவத்தைப்பற்றி, (அதனைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) கிடைத்தற் கருமையான பொருளினது பெருமையை மேலோர் பழியா ரென்பதாம்; "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலாதார்" என்பதனாலறிக. பெருமை-கண்டாருங் கேட்டாரும் விரும்பும் மகிமை.

(பழையவுரை.) அருமையுடைய தொன்றனை முடித்துக்கொள்ளும்பொழுது செய்கை பெரிதென்று பழித்து அதன்கண் உள்ள முயற்சிப் பெருமையைத் தவிரார், எ-று.

(7) செய்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார்.

(ப-ரை.) செய் தக்க-(சமய நேர்ந்தபோது) செய்யத்தக்க காரியத்தை, நல் கேளிர்-சிறந்த சுற்றத்தார், செய்யாமை - (சமயத்தில்) செய்யாமையைப்பற்றி, (அவரைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) செய்யத்தக்கதைச் சமயம் நேர்ந்தபோது செய்யாத வுறவினரை மேலோர் பழியா ரென்பதாம். செய் என்பது செய்ய வென்பதன் விகாரம். தக்க - துவ்விகுதி தொக்குநின்ற உடன்பாட்டுத் தெரிநிலை வினையாலணையும் பெயர். கேளிர் என்பதில் கேண்மை பகுதி. செய்யாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். செய்த் தக்க என்றும் பாடம்.

(பழையவுரை.) தமக்கு உதவி செய்தற்குத் தக்க நல்லகேளிர் உதவி செய்திலரென்று பிறர்க்குச் சொல்லிப் பழியார், எ-று.

(8) அறியாத தேசத் தாசாரம் பழியார்.

(ப-ரை.) அறியாத தேசத்து-(தாம்) அறியாத நாட்டில் வாழ்வோரது, ஆசாரம்-ஒழுக்கத்தைப்பற்றி, (அவரைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) தமது தேசத்தாரது ஆசாரத்திற்குத் தாமறியாத தேசத்தாரது ஆசார மாறுயிருப்பினும் அதனை யறிவுடையோர் பழியாரென்பதாம். ஆசாரக்கோவை: "அறியாத தேயத்தா னாதுலன்

மூத்தா, னிளையா னுயிரிழந்தா னஞ்சினு னுண்பா, னரசர் தொழி றலை வைத்தான் மணாளனென், றென்பதின்மர் கண்டீ ருரைக்குங் கான் மெய்யான, வாசாரம் வீடுபெற்றார்''. தேசம்-இடவாகுபெயர்.

(பழையவுரை.) தாம் அறியாத தேசத்தின்கண் சென்று அங் குள்ளார் ஒழுகும் ஒழுக்கத்தைப் பழியார், எ-று.

(9) வறியோன் வள்ளிய னன்மை பழியார்.

(ப-ரை.) வறியோன் - தரித்திரன், வள்ளியன் அன்மை-ஈகை யை யுடையவ னாகாமையைப்பற்றி, (அவனைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) தரித்திரன் தன்னை யிரப்போர்க்கு யாதுங் கொடா மையைப்பற்றி அவனை மேலோர் பழியா ரென்பதாம்; "இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத் தியற் கை" என்றது காண்க. வள்ளிய னென்பதில் வண்மை (ஈகை) பகுதி. செல்வமுள்ளபோது பிறர்க்குத் தன்னிடத்துள்ளதையேற்ற பெற்றி யாசகர்க் கீயாமை குற்றமாகுமே யன்றி யஃதில்லாதபோது ஈயாமை குற்றமாகாதென வீண்டுக் காட்டப்பட்டது.

(பழையவுரை.) வறுமை யுடையானை வண்மை யுடையனல்ல னென்று பழியார், எ-று.

(10) சிறியா ரொழுக்கஞ் சிறந்தோரும் பழியார்.

(ப-ரை.) சிறியார் - கீழ்மக்களது, ஒழுக்கம் - தீயவொழுக் கத்தைக் (கண்டு), சிறந்தோரும்-(அறிவா லிழிந்தோரே யன்றி அறி வால்) உயர்ந்தோரும், (அவரைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) கீழ்மக்களது செய்கையைக் கண்டு அவரை மேன் மக்கள் பழியா ரென்பதாம். தீயவொழுக்கம் - கள்ளுண்டல் முதலி யனவாம். ஈண்டு உம்மை இறந்தது தழீஇய உயர்வு சிறப்பும்மை.

சிறந்தோர்-தெரிநிலை வினையாலணையும் பெயர். சிறியோர் என்றும் பாடம்.

(பழையவுரை.) சிறுமைக் குணமுடையாருடைய கீழ்மைக் குணத்தை ஒழுக்கத்தான் மிக்காரும் கண்டாற் பழியார், எ-று.

பழியாப்பத்து முற்றிற்று.

---

## 4. துவ்வாப்பத்து.

வெறுப்பனவாகிய பத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள மக்களியாவருள்ளும், பழியோர் செல்வம் - (பிறர்க்குங்கொடாது தாமு மநுபவியாது அறிவுடையோரால்) பழிக்கப்படுபவாது செல்வம், வறுமையின் - தரித்திரத்தைப் பார்க்கினும், துவ்வாது - வெறுக்கத்தக்கது, எ-று.

(வி-ரை.) அறிவுடையோரால் பழிக்கப்படுகின்றவாது செல்வம் அவர்க்கேயன்றிப் பிறர்க்கும் பயன்படாமையின் அது வறுமையினுங் கொடிய தென்பதாம்; "பழிமலைந்தெய்திய வாக்கத்திற்சான்றோர், கழிநல் குரவே தலை" என்றார் திருவள்ளுவனாரும். செல்வம்-தொழிற்பெயர், செல்வதென்னும் பொருளது. துவ்வா தென்பதில் து-பகுதி; ஈஃது அஃறிணை யொருமைத் தெரிநிலை யெதிர் மறை வினைமுற்று.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும், பழியுடையோர் செல்வம் வறுமையின் நீங்கி யொழியாது, எ-று,

(2) கழிதறு கண்மை பேடியிற் றுவ்வாது.

(ப-ரை.) கழி - மிகுதியும், தறுகண்மை - அஞ்சத்தக்கவிடத் தஞ்சாமை, பேடியின் - பேடியின் செய்கையைப்பார்க்கிலும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) அஞ்சத்தக்கவிடத்துஅஞ்சாது பிறரை வருத்துவோர் பேடியினுமிழிந்தவராவரென்பதாம்; "அஞ்சுவதஞ்சாமை பேதைமை யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்" என்பது பொய்யாமொழி. பேடி-பொருளாகுபெயர்; பேடி-பெண்ணுறுப்புமிகுந்து ஆணுறுப்புக் குறைந்துள்ள பிராணி; "செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க், கொம்மை வரிமுலையா டோண்மரீஇ - யும்மை, வலியாற் பிறர்மனை மேற் சென்றுரே யிம்மை, யலியாகி யாடி யுண்பார்" என்றது நாலடி. கழி - உரிச்சொல். தறுகண்மை என்பதில் மை பகுதிப்பொருள் விகுதி. கழிதறுகண்மை யென்பதற்கு (வன்மையின்றியவரை) மிகுதியும் வருத்துதல் என்று பொருள்கூறினும் பொருந்தும்.

(பழையவுரை.) இடமும் காலமும் அறியாது மிக்க தறுகண்மை, பேடித்தன்மையின் நீங்கி யொழியாது, எ-று.

(3) நாணில் வாழ்க்கை பசித்தலிற் றுவ்வாது.

(ப-ரை.) நாண் இல் வாழ்க்கை - (ஒருவர்) வெட்க மில்லாமலுயிர்வாழ்தல், பசித்தலின்-(உணவின்றிப்) பசித்திருத்தலைப் பார்க்கினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) நாணம் விட்டுப் பிறரை யிரந்துண் டுயிர்வாழ்தல் பட்டினிகிடந்து வருந்துதலினுங் கொடிதென்பதாம்; "நாணா லுயிரைத் துறப்பர் உயிர்பொருட்டால், நாண்துறவார் நாணாள் பவர்" என்று திருவள்ளுவரும், "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" என்று தொல்காப்பியனாரும் கூறினர். இல் - ஈண்டு வினையெச்சப்பொருளில் வந்தது.

(பழையவுரை.) நாணிழந்து உண்டுவாழும் வாழ்க்கை, பசித்தலின் நீங்கி யொழியாது, எ-று.

(4) பேணி லீகை மாற்றலிற் றுவ்வாது.

(ப-ரை.) பேண் இல் - விருப்பமில்லாமல், ஈகை - (யாசகர்க்கு ஒன்றைக்) கொடுத்தல், மாற்றலின் - (அவருக்கு இல்லையென்று) மறுத்துரைப்பதினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவர்க்கு ஒன்றை வெறுப்புடன் கொடுத்தல் அஃது இல்லையென்று கூறுவதினுங் கொடிதென்பதாம். மாற்றல்-அல் ஈற்றுத் தொழிற்பெயர், அதன் பகுயாகிய மாறு றகர ஒற்றிரட்டித்து மாற்று என்றுயிற்று.

(பழையவுரை.) விருப்ப மில்லாத ஈகை, ஈகை மாறுதலின் நீங்கி யொழியாது, எ-று.

(5) செய்யாமை மேற்கோள் சிதடியிற் றுவ்வாது.

(ப-ரை.) செய்யாமை - (ஒருவர் தாம்) செய்து முடித்தற் கியலாத காரியத்தை, மேற்கோள் - (யாம் செய்து முடிப்போமென்று) மேற்கொள்ளுதல், சிதடியின் - அறிவில்லாதவனது செய்கையைக் காட்டிலும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவர் தாஞ் செய்து முடித்தற் கியலாத காரியத்தை மேற்கொள்ளல் அறிவில்லான் றனக்குத்தானே துன்பந்தருஞ் செயல்களைச் செய்து வருந்துவதுபோலத் துன்பத்திற் கிடமென்பதாம்; "பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை, கையல்ல தன்கட் செயல்" என்றார் திருவள்ளுவரும். செய்யாமை - எதிர்மறைத்தொழிலாகுபெயர். கோள்-முதனிலைத் தொழிற்பெயர், கொள் என்பதன் றிரிபு. செய்யாமை மேற்கோள் என்பதற்குப் பிறர்செய்து முடித்தற்கரிய காரியத்தை யாம்செய்து முடிப்போமென் றுறுதிமொழி கூறலென்று பொருளுரைப்பினும் அமையும்.

(பழையவுரை.) செய்யத் தகாதனவற்றை மேற்கொண்டு செய்யத் தொடங்குவது மையற்றன்மையின் நீங்கி யொழியாது, எ-று.

(6) பொய்வே ளாண்மை புலைமையிற் றுவ்வாது.

(ப-ரை.) பொய் - பொய்யாக, வேளாண்மை - (ஒருவர்) உபகாரியாந் தன்மை, புலைமையின் - (பிறர்க்குத்) தீங்கியற்றுவதினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவர் யாம் பிறர்க்குபகாரஞ் செய்கின்றேமென்றிடம்பமாகப் பொய்கூறுதல் பிறரை வருத்துதலினுங் கொடிதென்பதாம். வேள் - உபகாரம். ஆண்மை - ஆளுதற்றன்மை. புலைமை - இழிகுணம்; அது அதனாலாகுந் தீச்செயற்காதலின் ஈண்டுக் கருவியாகுபெயராம்.

(பழையவுரை.) பொய்பட்ட உபகாரம் புலைமையின் நீங்கி யொழியாது, எ-று.

(7) கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது.

(ப-ரை.) கொண்டு-(ஒருவரைச் சிநேகமாகக்) கொண்டு, கண்மாறல் - பிறகவரிடத்து உபேக்ஷயா யிருத்தல், கொடுமையின் - (அவர்க்குத்) தீமை செய்வதினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவரைச் சிநேகமாகக்கொண் டவரிடத்தில் அசட்டையா யிருத்தல் அவர்க்குத் தீங்கிழைப்பதனிலுங் கொடிதென்பதாம். கொண்டு என்பதற்கு (ஆதரிப்பாரின்றி வருந்தி யடைக்கலம் புகுந்தோரைக் காப்பாற்றுகின்றேமென மேற்கொண்டு) என்று பொருள்கூறினும் பொருந்தும். கண்மாறல்-கண்ணோட்ட மின்மை. கண் என்பது அதனது ஓட்டத்திற்காதலி னிடவாகுபெயராம்.

(பழையவுரை.) ஒருவனை ஒருவன் நட்பாகக் கொண்டவைத்துக் கண்ணோட்டத்தை மாறுதல் கொடுமையின் நீங்கி யொழியாது, எ-று.

(8) அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது.

(ப-ரை.) அறிவிலி - (தக்கதின்னது, தகாத தின்னதென்று பகுத்துணரும்) அறிவில்லாதவனை, துணைப்பாடு-(ஒருவன்) துணைகொண்டிருத்தல், தனிமையின்-தனித்திருத்தலினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவன் தனித்துவாழுந் துன்பத்தினு மூடனை துணையாகக்கொண்டு வாழ்தல்கொடிதாம்; "இணக்கமறிந்திணங்கு", "மூர்க்கரோடிணங்கேல்", "நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்" என்பனவும் நோக்கத்தக்கன. அறிவிலி - இகரவீற் றுயர்திணை யாண்பாற்பெயர். கோட்பா டென்பதுபோலத் துணைப்பாடு என்பது பாடீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) அறிவில்லாதா னொருவனோடு துணைப்பாடு தனிமையின் நீங்கி யொழியாது, எ-று.

(9) இழிவுடை மூப்புர கத்திற் றுவ்வாது.

(ப-ரை.) இழிவு உடை - வலி குறைதலுடைய, மூப்பு - கிழத்தனமானது, அங்கதத்தின்-பாம்போடுவாழ்தலினும், துவ்வாது—, எ - று.

(வி-ரை.) மூப்புத் தன்னாலேயன்றிப் பிறராலும் வெறுக்கத் தக்கதா யிருத்தலின் அது பாம்புடன்கூடி வாழ்தலினும் வெறுக்கத் தக்கதாயிற்று. இழிவு வுவ்வீற்றுத் தொழிற்பெயர். மூப்பு - கிழத்தனம்; தொழிலாகு பெயர்.

(பழையவுரை.) இழிவினையுடைய மூப்பு, பிறர் வெறுத்து வெகுளும் வெகுட்சியின் நீங்கி யொழியாது, எ-று.

(10) தானே ரின்புறல் தனிமையிற் றுவ்வாது.

(ப-ரை.) தான் - (ஒருவன் உறவினரை நீக்கித்) தானே, ஓர் - ஒப்பற்ற, இன்பு உறல் - சுகத்தை யனுபவித்தல், தனிமையின் - (மனைவிமக்களின்றித்) தனித்திருத்தலினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவன் உறவினரின்றி மனைவி மக்களுடன் சுகித்துவாழ்தல் அனுபவிக்கும் பொருளின்றித் தான்மாத்திரம் இருந்து வருந்துதலினுங் கொடிதென்பதாம்; "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று", "மருந்தேயாயினும் விருந்தோ டுண்", "இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய, தாமே தமிய ருணல்" என்பவற்றானுமறிக. தான் என்பதிற் பிரிநிலை ஏகாரந் தொக்குநின்றது.

(பழையவுரை.) தானே ஒருவன் இன்புறுதல் வறுமையின் நீங்கியொழியாது, எ-று.

துவ்வாப்பத்து முற்றிற்று.

---

## 5. அல்லபத்து.

அல்லாதன (விலக்குவன) வாகிய பத்து விஷயம். நல்ல என்பது அன்சாரியை பெறாத எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
நீரறிந் தொழுகா தாடார மல்லள்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல் சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், நீர் அறிந்து - (கணவனது) வருவாயைத் தெரிந்து, ஒழுகாதாள் - (அதற்குத் தக்கவாறு) நடவாதவள், தாரம் அல்லள் - (அவனுக்கவள்) மனைவியாகமாட்டாள், எ-று.

(வி-ரை.) கணவனது வரும்படியைத் தெரிந்து அதற்கேற்றவாறு நடவாதவள் மனைவியாகா ளென்பதாம். தாரம்-வடமொழிப் பெயர்; இது சாதியொருமை. ஒழுகாதாள் - எதிர்மறை வினையாலணையும் பெயர். நீர் அறிந்து என்பதற்குக் கணவனது குணத்தைத் தெரிந்தென வேறுபொருள் கொள்ளினுமாம். திரிகடுகம்:—"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன, செய்வகை செய்வான் றவசி-கொடிதொரீஇ, நல்லவை செய்வா னரச னிவர்மூவர், பெய்யெனப் பெய்யு மழை" என்பதனாலறிக.

(பழையவுரை.) ஆர்கலியால் சூழப்பட்ட வுலகத்து மக்கட்கெல்லாம், கொழுநனது குணமறிந்து ஒழுகாதாள் மனையாளல்லள், எ-று.

(2) தாரமா ணாதது வாழ்க்கை யன்று.

(ப-ரை.) தாரம் - மனைவியினால், மாணாதது - மாட்சிமைப்படாத வாழ்க்கை, வாழ்க்கை அன்று-இல்வாழ்க்கை யன்றாம், எ-று.

(வி-ரை.) ஒருவனது இல்வாழ்க்கை யவன்மனைவி யொத்து நடவாவிடத்துச் சிறப்புப் பெறாதென்பதாம்; "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித் தாயினு மில்", "இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ, னில்லவண் மாணாக்கடை" என்றார் திருவள்ளுவனாரும். மாணுமையாவது கணவன் சொல்லுக்கு ஏறுமாறாக நடத்தல்; மாணாதது-வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) மனையாள் மாட்சிமைப்படாத மனைவாழ்க்கை, மனை வாழ்க்கையன்று, எ-று.

(3) ஈரமல் லாதது கிளைநட் பன்று.

(ப-ரை.) ஈரம் - (மனத்தின்கண்) அன்பு, அல்லாதது - இல் லாத சிநேகம், கிளை-விருத்தியாதற்கு (ஏதுவாகிய), நட்பு அன்று- சிநேகமல்ல, எ-று.

(வி-ரை.) அன்பின்றிய சிநேகஞ் சிநேகமாகா தென்பதாம்; "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத், தகநக நட்பது நட்பு" என்றார் திருவள்ளுவரும். சிநேகம் அல்லாத தென்பதில் அன்மை யீண்டு இன்மைப் பொருளில் வந்தது. ஈரம்-பண்புப்பெயர். ஈரமில்லாதது என்றும் பாடம்.

(பழையவுரை.) மனத்தின்கண் ஈரமில்லாதது கிளையுமன்று நட்புமன்று, எ-று.

(4) சோரக் கையன் சொன்மலை யல்லன்.

(ப-ரை.) சோரம் கையன்-களவொழுக்க முடையோன், சொல்-(தான்கூறுஞ்) சொல்லில், மலை - மாறுபாடா யிருத்தல், அல்லன்-ஆகான், எ-று.

(வி-ரை.) பிறர் பொருளை யபகரிப்பவன் பொய் பேசுவானே யன்றி மெய்பேசா னென்பதாம். மலை-முதனிலைத் தொழிற்பெயர். சோரம்-வடமொழிப்பெயர். கை-ஒழுக்கம். சோராக்கையன் என்றும் பாடம்.

(பழையவுரை.) பிறர்க்கு ஒன்றையுதவாத கையுடையோன் புகழைத் தாங்கமாட்டான், எ-று.

## (5) நேரா நெஞ்சத்தோ னட்டோ னல்லன்.

(ப-ரை.) நேரா - ஒற்றுமைப்படுதலில்லாத, நெஞ்சத்தோன் - மனமுடையோன், நட்டோன் அல்லன் - நட்பினனாகான், எ-று.

(வி-ரை.) உள்ளே யொற்றுமையின்றி வெளியிலொற்றுமை யுடையோன்போலப் பேசுபவனது நட்பு நட்பாகா தென்பது; "மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ், சொல்லினாற் றேறற்பாற் றன்று" என்றார் திருவள்ளுவரும். நெஞ்சென்பதங்குள்ள மனதிற்காதலின் இடவாகுபெயர்.

(பழையவுரை.) வேறாய் உடன்படாத நெஞ்சத்தோன் நண்புடையனல்லன், எ-று.

## (6) தேராமற் கற்றது கல்வி யன்று.

(ப-ரை.) தேராமல் - (நல்லாசிரியனை யடுத்துத் தான் கற்றற்குரிய நூற்பொருளைச் செவ்வையாகத்) தெளிந்தறியாமல், கற்றது - (ஒருவன் தானே) கற்றறிந்தது, கல்வி அன்று - கல்வியல்ல, எ-று.

(வி-ரை.) ஆசிரியனை யடுத்துக் கல்லாதகல்வி சிறிதும் பயன்படாதென்பதாம். தேராமல் - மல்லீற்று எதிர்மறை வினையெச்சம். கற்றது - வினையாலணையும்பெயர். 'தேராமைக் கற்றது' என்றும் பாடம்.

(பழையவுரை.) கற்பிக்கும் ஆசிரியனுக்கு ஒன்றைக் கொடாது கற்குமது கல்வியன்று, எ-று.

## (7) வாழாமல் வருந்தியது வருத்த மன்று.

(ப-ரை.) வாழாமல் - (ஒருவனில்லறத்திருந்து)வாழுதலின்றி, வருந்தியது - துன்பமடைந்தது, வருத்தம் அன்று - துன்பமல்லவாம், எ-று.

(வி - ரை.) இன்பத்தின் பகுதி யறியாதவனுக்குத் துன்பத்தின் பகுதி யறியப்படாதென்பதாம். இது துறவறத்தை நோக்கியதன்று. 'வாழாமை வருந்தியது' என்றும் பாடம்.

(பழையவுரை.) தன்னுயிர் வாழாமை வருந்தியது வருத்தமன்று, எ-று.

## (8) அறத்தாற்றி னீயாத தீகை யன்று.

(ப-ரை.) அறத்து ஆற்றின் - தருமவழியினின்று, ஈயாதது - (இரப்பவர்க்குக் கொடுத்தற் குரியனவற்றைக்) கொடாதது, ஈகை அன்று - கொடையல்ல, எ-று.

(வி-ரை.) அதர்மவழியிலே நின்று ஒருவன் கொடையுடையனுதல் பசுவைக்கொன்று செருப்பைத் தானஞ்செய்வது போலாமென்பதாம். அறத்தாறு அறத்தினதாறென விரியும்.

(பழையவுரை.) அறத்தின் நெறியின் ஈயாதது ஈகையன்று. (ஈகை - பயன் கருதாது கொடுத்தல்).

## (9) திறத்தாற்றி னோலா தநோன் பன்று.

(ப-ரை.) திறத்து ஆற்றின் - உண்மையான வழியினின்று, நோலாதது - விரதஞ் செய்யாதது, நோன்பு அன்று - விரதமல்ல, எ-று.

(வி-ரை.) உண்மை வழியினின்று விரதமனுட்டிக்க வேண்டுமென்பதாம். "நோரா நோன்பு சீராகாது" என்றனர் ஔவையார். நோலாததென்பதில் நோல் பகுதி; நோற்றல் அகவிந்திரியமாகிய மனதையும், புறவிந்திரியமாகிய மெய் வாய் கண் மூக்குச் செவிகளையுந் தத்தம் விஷயங்களிற் செல்லாவாறு தடுத்தல்.

(பழையவுரை.) தன்குலத்திற்கும் நிலைமைக்குந் தக நோலாதது தவமன்று; (நோற்றல் - விரதங்காத்தல்).

(10) மறுபிறப் பறியா ததுமூப் பன்று.

(ப-ரை.) மறுபிறப்பு - (இப்பிறப்பிலேயே) வேறு பிறப்பை, அறியாதது - தெரிந்துகொள்ளாதது, மூப்பு அன்று-(ஒருவனுக்கு) முதுமைப்பருவமல்ல, எ-று.

(வி-ரை.) மறுபிறப்பை யறிதலாவது-எடுத்தவிப்பிறப்பிலேயே பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் முள்ளவாறறிந்து ஞானயோகவலியால் பிறவியில்லாதவனாதல். ஒருவன் தனது வாணாளை வீணாளாக்காது முதுமைக்குள்ளாவது மறுபிறப்பை யடைய வேண்டுமென் றுணர்த்தியவாறும்.

(பழையவுரை.) மறுபிறப்பை யறிந்து அறத்தின்வழி யொழுகாதே மூத்த மூப்பு மூப்பன்று, எ-று.

அல்லபத்து முற்றிற்று.

---

## 6. இல்லைபத்து.

இன்மையாகிய பத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்.
மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், மக்கள் பேற்றின் - பிள்ளைகளைப் பெறுதலைப் பார்க்கினும், பெறும் பேறு - அடையத்தக்க பாக்கியம், இல்லை - பிறிதொன்றில்லை, எ-று.

(வி-ரை.) பிள்ளையில்லாதவர்க்கு வேறு செல்வங்களென்ன விருப்பினு மவற்றாற் பயனில்லை யென்பதாம்; "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" என்றார் திரு

வள்ளுவரும். ஈண்டு மக்களென்றது கல்வியறி வொழுக்கங்களு டைய பிள்ளைகளை. பேறு - பெறப்படுவது.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து மக்கட் கெல்லாம் புதல்வரைப் பெறும் பேற்றிற் பெறும்பேறில்லை, எ-று.

(2) ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை.

(ப-ரை.) ஒப்புரவு - (தாம் வாழுந்தேச) முறைமையை, அறித லின் - அறிதலைப் பார்க்கினும், தகுவரவு-தக்கவரவுடைய பொருள், இல்லை—, எ-று.

(வி-ரை.) தேசத்தோடொத்து வாழாதவர் செல்வமுடையவ ராகா ரென்பதாம்; "ஒப்புரவொழுகு" என்றார் ஔவையார். தகு - வினைத்தொகை. வரவு - தொழிலாகுபெயர்.

(பழையவுரை.) செய்யக்கடவன செய்கையோடொக்குந் தகு தியில்லை, (ஒப்புரவு-உலகநடை) எ-று.

(3) வாய்ப்புடை வழக்கி னல்வழக் கில்லை.

(ப-ரை.) வாய்ப்பு உடைய - தகுதியுடைய, வழக்கின் - வழக்கினை மேற்கொள்ளுதலைப் பார்க்கினும், நல்வழக்கு - சிறந்த வழக்கு, இல்லை—, எ-று.

(வி-ரை.) சிறப்புடைய வழக்கை மேற்கொள்ளுதல் நன்மை யைத் தருமென்பதாம். வாய்ப்பு-புவ்வீற்றுத் தொழிற்பெயர். உடை என்பது அகரவீறு தொக்குநின்ற குறிப்புப் பெயரெச்சம். வாய்ப் புடை வழக்காவது-ஒருவன் தனக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய பொருளைப்பற்றி யாரசிடத்து முறையிட்டுப் பெறமுயலுதல்.

(பழையவுரை.) 'வாய்ப்புடை விழைச் சினல்விழைச் சில்லை' என்றும்பாடம். மக்கட்பேறு வாய்த்த கலவிபோலுங் கலவியின் நல்ல தில்லை, (விழைச்சு - கலவி), எ-று.

(4) வாயா வழக்கிற் றீவழக் கில்லை.

(ப-ரை.) வாயா - தகுதியாகாத, வழக்கின்-வழக்கினைப் பார்க்கினும், தீ வழக்கு - கொடியவழக்கு, இல்லை—, எ-று.

(வி-ரை.) முறைதவறி வழக்குத் தொடுத்தல் குற்றமாகுமென்பதாம். தீ என்பது தீமை யென்பதன் விகாரம், ஈண்டும் மேலுள்ள வழக்கென்பதற்கு ஈகையெனப் பொருள் கூறினும் பொருந்தும்.

(பழையவுரை.) 'வாயா விழைச்சிற் றீவிழைச்சில்லை' என்றும் பாடம். மக்கட்பேற்றின் பொருட்டன்றிக் கலக்குங் கலவிபோலத் தீயது இல்லை, (வாயா – பொருந்தாது) எ-று.

(5) இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை.

(ப-ரை.) இயைவது - (தான் யாசகர்க்குக்) கொடுக்கக் கூடிய பொருளை, கரத்தலின் - (இல்லையென்று) மறைத்தலைப் பார்க்கினும், கொடுமை - தீமை, இல்லை—, எ-று.

(வி-ரை.) யாசகர்க்குக் கொடுக்கக்கூடிய பொருளை யில்லையென்றுகூறி மறைத்தல் கூடாதென்பதாம். "இயல்வது கரவேல்" என்றார் ஔவையாரும். இயைவது-வினையாலணையும் பெயர்.

(பழையவுரை.) தான் பிறர்க்குக் கொடுக்கவியலும் பொருளை இல்லையென்று கரக்குங் கரப்பிற் கொடுமையில்லை, (இயைதல் - பொருந்துதல். கரத்தல் - ஒளித்தல்), எ-று.

(6) உரையில னாதலிற் சாக்கா டில்லை.

(ப-ரை.) உரை இலன் ஆதலின் - (அன்பினரோடு மனங்கலந்து ஒருவன்) வார்த்தையாடாதவனா யிருத்தலைப் பார்க்கினும், சாக்காடு - (அவனுக்கு) மரணம், இல்லை—, எ-று.

(வி-ரை.) இலௌகிக முறைமையிற் பேசத் தகுந்தோரிடத்து மனங்கலந்து பேசாதவன் தன் மரணத்திற்குத் தானே ஏதுவாகவுள்ளா னென்பதாம். சாக்காடு-காடீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) "உணர்விலன்" என்றும் பாடம். ஒருவற்கு அறிவின்மையோ டொக்குஞ் சாக்காடில்லை, எ-று.

(7) நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.

(ப-ரை.) நசையின் -(ஒருவ னளவுக்கதிகமாகப் பொருள்களில்) ஆசை வைப்பதைப் பார்க்கினும், பெரியது - பெரிதாகிய, ஓர் நல்குரவு - ஒரு தரித்திரம், இல்லை—, எ-று.

(வி-ரை.) "போதுமென்னு மனமே பொன்செய்யு மருந்து" என்றமைந்திராது பொருள்களை மேன்மேலும் அளவுகடந்து விரும்புதலே பெருந்தரித்திர மென்பதாம். இதனை "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை, யாண்டு மஃதொப்ப தில்", "காணியாசை கோடி கேடு", "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பதனாலுமறிக. நல்குரவு - நல்கு உரவு எனப் பிரிபடும்; அதன்பொருள் பிறர் தருவதை யாசையோ டெதிர்நோக்கியிருத்த லென்பதாம். நசை - பண்புப்பெயர்.

(பழையவுரை.) ஆசையின் மிக்கதொரு வறுமையில்லை, எ-று.

(8) இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை.

(ப-ரை.) இசையின்-புகழடைதலைப் பார்க்கினும், பெரியது - பெரிதாகிய, ஓர் - ஒரு, எச்சம் - சந்ததி, இல்லை—, எ-று.

(வி-ரை.) ஆதாரமாகிய வுலகமுள்ளளவும் ஆதேயமாகிய இசையிருத்தலின் அதைப் பார்க்கினும் பெரியதோர் சந்ததியில்லை யென்பதாம். "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது நிற்பதொன் றில்" என்றார் நாயனார். எச்சம்-எஞ்சு (மிகு) வதென்னும் பொருளது. இசை யென்பதன் முரண்மொழி வசை. எச்சம் - வினைமுதற் பொருளை யுணர்த்தும் அம்மீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) புகழுடைமையின் மிக்குப் பிற்பயப்பதோர் ஆக்கம் ஒருவற்கு இல்லை, எ-று.

(9) இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.

(ப-ரை.) இரத்தலின் ஊஉங்கு-(ஒருவரிடத் தொன்றை) யாசித்தலைப் பார்க்கினும், இளிவரவு - இழிவு (அவமானம்), இல்லை—, எ-று.

(வி-ரை.) பிச்சை யெடுப்பதற்கு மேற்பட்ட அவமானமில்லை என்பதாம். "ஏற்ப திகழ்ச்சி", "உரவோ ரென்கை யிரவா திருத்தல்", 'பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச், சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி, மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி,யில்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்" என்றார் பிறரும். இளிவரவு-இளி (அவமானம்) வரவு (வருதல்) எனப் பிரிபடும். ஊங்கு என்பது ஒன்றன் மிகுதியையும் பிறிதொன்றன் குறையையுங் காட்டுவதோ ரிடைச்சொல். ஊஉங்கென்பது செய்யுளிசை யுயிரளபெடை.

(பழையவுரை.) இரந்து உயிர் வாழ்தலின்மேற் கீழ்மையில்லை; (இளிவரவு-எளனம்) எ-று.

(10) இரப்போர்க் கீதலி னெய்துஞ் சிறப்பில்லை.

(ப-ரை.) இரப்போர்க்கு ஈதலின் - யாசிப்போர்க்கு (அவர் வேண்டியவற்றைக்) கொடுத்தலைப்பார்க்கினும், எய்தும் சிறப்பு - அடையுஞ் சிறப்பானது, இல்லை—, எ-று.

(வி-ரை.) ஒருவர்க்குக் கல்வி முதலியவற்றா லுண்டாகுஞ் சிறப்பினு மீதலா லுண்டாகுஞ் சிறப்பே மேன்மையுடைய தென்பதாம்; "ஐயமிட்டுண்", "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா, னீதி வழுவா நெறிமுறையின்—மேதினியி, லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர், பட்டாங்கி லுள்ள படி" என்றார் ஔவையாரும்.

(பழையவுரை.) இரப்போர்க்குக் கொடுப்பதின் மிக்கதாய் எய்தும் மேன்மையில்லை, எ-று.

இல்லைபத்து முற்றிற்று.

## 7. பொய்ப்பத்து.

பொய்ம்மையாகிய பத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரறிவினோ னினிது வாழாமை பொய்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், பெருமை அறிவினேன்-சிறந்த அறிவுடையவன், இனிது - சுகமாக, வாழாமை - வாழாதிருத்தல், பொய் - பொய்யாம், எ-று.

(வி-ரை.) ஒருவனுக்குப் பேரறிவுடைமையே பெருஞ்செல்வ மாதலின் அவன் றுன்பமடைதற் கேதுவில்லையென்பதாம். இனிது-வினையுரிச்சொல். பேரறிவாவது - இது தக்கது இது தகாததென்று பகுத்தறியு மறிவு. பொய் என்பதின் ஈற்றில் ஆமென்னு மாக்க வினை தொக்குநின்றது.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து எல்லா மக்களுள்ளும், ஒருவன் பேரறிவுடையவனாயின் அவன் மனத்தால் இன்புற்று ஒழுகாமை பொய், எ-று.

(2) பெருஞ்சி ரோன்றன் வெகுளியின்மை பொய்.

(ப-ரை.) பெருமை சீரோன் - பெருஞ் சிறப்பிற் கேதுவாகிய செல்வமுடையவன், வெகுளி இன்மை - கோபமில்லாதிருத்தல், பொய்—, எ-று.

(வி-ரை.) செல்வமுடையோர் கோபமின்றி யிருத்தல் முடியா தென்பதாம். பெருமை யென்பது மைவிகுதி தொக்குப் பெரு என வந்தது. சீர் - காரியவாகுபெயர். வெகுளி - இகரவீற்றுத் தொழிற் பெயர். தன் - சாரியை.

(பழையவுரை.) பெருஞ் செல்வத்தைப் பெற்று ஒருவன் வெகுளாமை பொய், எ-று.

(3) கள்ளுண் போன்சோர் வின்மை பொய்.

(ப-ரை.) கள் உண்போன் - கள்ளைக் குடிப்பவன், சோர்வு இன்மை - சோர்வில்லாதிருத்தல் பொய்—, எ-று.

(வி-ரை.) கள்ளுண்போன் தளர்ச்சி யில்லாதிருக்க முடியாதென்பதாம். இது பஞ்சமகா பாதகங்களி லொன்றும்; அவையாவன:—கொலை, பொய், களவு, கட்குடித்தல், குருநிந்தை என்பன. சோர்வு - மனோவாக்குக் காயங்களின் றளர்ச்சி. கைத்து - (அறிவுடையோரால்) வெறுக்கத்தக்கது என்னும் பொருளது.

(பழையவுரை.) கள்ளை யுண்போன் ஒழுக்கஞ் சோர்வின்மை பொய், எ-று.

(4) கால மறியாதோன் கைத்துறல் பொய்.

(ப-ரை.) காலம் அறியாதோன் - சமயமறிந்து நடவாதவன், கைத்து உறல் - கருமமுடித்தல், பொய்—, எ-று.

(வி-ரை.) "அருவினை யென்ப வுளவோ கருவியாற், கால மறிந்து செயின்" என்றபடி எவ்வெக்காலத் தெதுவெது செய்யவேண்டுமோ வவ்வக்காலத் தஃததை செயல்வேண்டும்; அவ்வாறு செய்யாது சோம்பிக் கிடப்பவன் செல்வமுடையோனாகா னென்பதாம்.

(பழையவுரை.) காலமறிந்து முயலாதோன் கருமம் முடிதல் பொய்; கையுறல்-(கருமம் முடித்தல்) என்றும் பாடம், எ-று.

(5) மேல்வர வறியாதோன் றற்காத்தல் பொய்.

(ப-ரை.) மேல்வரவு அறியாதோன் - இனி வரத்தக்கதை யறியாதவன், தன் காத்தல - தன்னைக் காத்துக்கொள்ளுதல், பொய்—, எ-று.

(வி-ரை.) இனிவருவ திஃதென்பதை ஆய்ந்துணராதவன் றன்னைக் காத்துக்கொள்ளுதல் பொய்யா மென்பது. "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர், வைத்தூறு போலக் கெடும்", "அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா, ரஃதறி கல்லா தவர்" என்பது திருக்குறள். வரவு - தொழிலாகுபெயர். அறியாதோன் - வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) எதிர்காலத்து வரும் இடையூ றறியாதான் தனக்கு அரண்செய்து காத்தல் பொய், எ-று. (அரண்-காப்பு.)

(6) உறுவினை காய்வோ னுயர்வுவேண்டல் பொய்.

(ப-ரை.) உறு வினை - (பயன்) தருங்காரியத்தை, காய்வோன்- (செய்யாது) வெறுப்பவன், உயர்வு-மேன்மையை, வேண்டல் - விரும்புதல், பொய்—, எ-று.

(வி-ரை.) பயன்தரத்தக்க காரியத்தைச் செய்யாது விடுபவன் மேன்மையடையா னென்பதாம். "சோம்பித் திரியேல்" என்றார் ஔவையாரும். உறு-வினைத்தொகை.

(பழையவுரை.) 'உறுவினைக் கயர்வோன்' என்பதும் பாடம். மிக்ககருமஞ் செய்கைக்கு மடிந்திருப்போன் தனக்கு ஆக்கம் வேண்டுதல் பொய், எ-று. (மடிதல்-அயர்வு, சோர்வு. ஆக்கம்-செல்வம்).

(7) சிறுமைநோ னாதான் பெருமைவேண்டல் பொய்.

(ப-ரை.) சிறுமை நோனாதான்-(பொருள்தேடுமிடத் துண்டாகும்) வருத்தத்தைப் பொறுக்காதவன், பெருமை-(பொருளினாலுண்டாகும்) பெருமையை, வேண்டல் - விரும்புதல், பொய்—, எ-று.

(வி-ரை.) பொருள்தேடுமிடத் துண்டாகும் வருத்தத்தை யெண்ணிச் சோம்பி யிருப்பவ னொருகாலத்தும் பெருமை யடையா

னென்பதாம். "சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்" என்றார் ஒளவையாரும். சிறுமை பெருமை யென்பன முரண்டொடை, விரோதாலங்காரமுமாம். சிறுமைக்குப் பெருமை முரண்மொழியாம்.

(பழையவுரை.) பிறர்க்குத் தான்செய்யும் பணிவினைப் பொருதோன் தனக்குப் பெருமை வேண்டுதல் பொய், எ-று.

(8) பெருமைநோ னாதோன் சிறுமைவேண்டல் பொய்.

(ப-ரை.) பெருமை-(பிறர் தனக்குச் செய்யும்) மேன்மையை, நோனாதோன் - (விரும்பி) மேற்கொள்ளாதவன், சிறுமை-இழிவை, வேண்டல் பொய்—, எ-று.

(வி-ரை.) பிறர்செய்யுங் கௌரவத்தை விரும்பாதவனுக் கெஞ்ஞான்று மிழிவில்லை யென்பதாம்.

(பழையவுரை.) பிறர்க்குத் தான் அரியனும் பெருமை வேண்டாதான் தனக்குச் சிறுமைக்குணம் வேண்டுதல் பொய், எ-று.

(9) பொருணசை வேட்கையான் முறைசெயல் பொய்.

(ப-ரை.) பொருள் - செல்வத்தில், நசை வேட்கையான் - மிகுந்த விருப்பமுடையவன், முறை செயல் - ஒழுங்கான காரியத்தைச் செய்தல், பொய்—, எ-று.

(வி-ரை.) பேராசையுள்ளவன் நியாயவழியி னடவா னென்பதாம். நசை வேட்கை - ஒருபொருட் பன்மொழி.

(பழையவுரை.) பொருள் நசையால் வரும் வேட்கையையுடையான் முறைசெய்தல் பொய், எ-று. (நசை - இச்சை. வேட்கை - ஆசைப்பெருக்கம். முறை - நீதி.)

(10) வாலிய னல்லாதோன் றவஞ்செய்தல் பொய்.

(ப-ரை.) வாலியன் அல்லாதோன் - (மனத்) தூய்மையில்லாதவன், தவம் செய்தல் - தவத்தைச் செய்தல், பொய்—, எ-று.

(வி - ரை.) மனச்சுத்த முடையவனே தவஞ்செய்தற் குரியனு மென்பது. மனத்திற் காமவெகுளி மயக்கங்களை யுடையராய்ப் புறத்தே துறவுவேடம் பூண்டிருப்பவர் செய்யும் தவம் தவமாகாதென்க. "மனத்தது மாசாக மாண்டார் நீராடி, மறைந்தொழுகு மாந்தர் பலர்" என்றார் நாயனாரும். அல்லாதோன் எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) மனத்தின்கண் தூயனல்லாதோன் தவஞ்செய்தல் பொய், எ-று. (வாலியன் - தூயன், பரிசுத்தன்.)

போய்ப்பத்து முற்றிற்று.

## 8. எளிய பத்து.

எளியவென்பது எண்மையென்னும் பகுதியடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். எளியனவாகிய பத்து விஷயமெனப் பொருள் கொள்ளுங்கால் அன் சாரியை குறைந்து நின்ற அஃறிணைப் பலவின்பா லுடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயராம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
புகழ்வெய் யோர்க்குப் புத்தேணா டெளிது.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல் சூழ்ந்தவுலகத்துள்ள மக்களியாவருள்ளும், புகழ் - கீர்த்தியை, வெய்யோர்க்கு - விரும்புகின்றவர்களுக்கு, புத்தேள் நாடு-தேவருலகம், எளிது- (அடைதல்) சுலபமாம், எ-று.

(வி - ரை.) புகழுடையோர் தவறாது சுவர்க்கமடைவரென்பதாம். "நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப், போற்றாது புத்தே

ஞலகு'' என்றார் திருவள்ளுவரும். வெய்யோர்-குறிப்பு வினையாலணை யும் பெயர். நாடு-நாடப்படுவதென்னும் பொருளது. நாடல் - விரும் பல். எளிது - குறிப்பு வினைமுற்று.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து மக்களெல் லாருள்ளும், ஒருவர்க்குப் புகழ்விரும்பின் கடவுளர்வாழு நாடுபெறுத லெளிது, எ-று.

(2) உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது.

**(ப-ரை.)** உறழ்-(யாவரோடும்) பகைக்கின்ற, வெய்யோருக்கு- கொடியவர்க்கு, உறு - நேரிடுகின்ற, செரு - சண்டை, எளிது—, எ - று.

**(வி-ரை.)** யாவரோடும் பகைக்கு மியல்புடையவர் பிறரோடு போர் புரிதலை யெளிதிலடைவ ரென்பதாம். உறழ், உறு என்பன வினைத்தொகைகள். செரு-முதனிலைத் தொழிற்பெயர்,

(பழையவுரை.) பிறரோடு கலகம் விரும்புவார்க்கு மிக்க செரு எளிது, எ-று.

(3) ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை யெளிது.

**(ப-ரை.)** ஈரம் - (பிராணிகளிடத்து) அன்பு, வெய்யோர்க்கு - மிகுதியாக வுடையவர்களுக்கு, (பிறர் விரும்பிய தொன்றை) நசை- விருப்பத்தோடு, கொடை - கொடுத்தல், எளிது—, எ-று.

**(வி-ரை.)** பிராணிகளிடத்து மிக்க வன்புள்ளவ ரியாவ ரெது கேட்பினு மதனைத் தவறாது கொடுப்பரென்பதாம். "அன்பிலா ரெல் லாந் தமக்குரிய ரன்புடையா, ரென்பு முரியர் பிறர்க்கு" என்றார் நாயனாரும். இந்நூலின்கண் "ஈர முடைமை யீகையி னறிப" என்று பிறிதோரிடத்திருப்பது மறிக. கொடை-ஐயீற்றுத் தொழிற்பெயர்,

(பழையவுரை.) மனத்துள் ஈரத்தை விரும்பி யிருப்பாருக்கு, பிறனொருவன் நசைகெடக் கொடுத்தல் எளிது, எ-று.

## (4) குறளைவெய் யோர்க்கு மறைவிரி யெளிது.

(ப-ரை.) குறளை - கோட்சொல்லும், வெய்யோர்க்கு - கொடியவருக்கு, மறை - இரகசியத்தை, விரி - வெளியிடுதல், எளிது—, எ - று.

(வி-ரை.) புறங்கூறவோ ரெப்படிப்பட்ட இரகசியத்தையும் வெளியிடுவ ரென்பதாம். வெய்யோர்க் கென்பதற்கு விருப்பமுடையோர்க்கெனப் பொருள் கூறினும் பொருந்தும். குறளை-புறங்கூறல். விரி - முதனிலைத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) குறளைச் சொல்லை விரும்புவார்க்கு, ஒருவன் மறையச்செய்த தொன்றனை வெளிப்படுத்திப் பிறரை யறிவித்தல் எளிது, எ-று.

## (5) துன்பம் வெய்யோர்க் கின்ப மெளிது.

(ப-ரை.) துன்பம் - துன்பத்தை, வெய்யோர்க்கு - விரும்பியவர்க்கு, இன்பம் - சுகமுண்டாதல், எளிது—, எ - று.

(வி-ரை.) இன்பத்தை விரும்பாது துன்பத்தையே விரும்புவார்க்கு இன்ப மெளிதி லுண்டாகு மென்பதாம். "இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான், றுன்ப முறுத லிலன்" என்றார். திருவள்ளுவரும். என்பன முரண்டொடை, விரோதாலங்காரமுமாம் இன்பம் துன்பம் என்பன அம் சாரியைபெற்ற பண்புப்பெயர்கள்; இவை சாரியை பெறாதபோது இன்பு துன்பு எனவரும்.

(பழையவுரை.) ஒன்றனை முயன்று வருந்துன்பத்தை வெறாதார்க்கு, இன்பமெய்துதல் எளிது, எ - று. (வெறாதார் - விரும்புகின்றவர்).

(6) இன்பம்வெய் யோர்க்குத் துன்ப மெளிது.

(ப - ரை.) இன்பம் வெய்யோர்க்கு - இன்பத்தையே விரும்புவோர்க்கு, துன்பம் - துன்பமுண்டாதல், எளிது—, எ-று.

(வி-ரை.) இன்பத்தையே விரும்புபவர்க்குத் துன்ப மெளிதிலுண்டாகு மென்பதாம்.

(பழையவுரை.) முயன்று வருந்தாமையால் வரும் இன்பத்தை விரும்புவார்க்கு, பொருளில்லாமையால் வருந்துன்பம் எளிது, எ-று.

(7) உண்டி வெய்யோர்க் குறுபிணி யெளிது.

(ப-ரை.) உண்டி - (மிகுதியும்) சாப்பாட்டில், வெய்யோர்க்கு-பிரியமுடையவருக்கு, உறு பிணி-வரத்தக்க நோய், எளிது—, எ-று.

(வி-ரை.) அளவின்றி யுண்போர்க்குக் கரையின்றி நோய் வருமென்பதாம். "இழிவறிந் துண்பான்க ணின்பம்போல் நிற்கும், கழிபே ரிரையான்கண் நோய்", "தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி, னோயள வின்றிப் படும்" என்றார் நாயனாரும். "மீதூண் விரும்பேல்" என்றார் ஔவையாரும். "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்" என்பது பழமொழி. உண்டி - செயப்படுபொருளில் வந்த இகரவீற்றுத் தொழிற்பெயர். பிணி - வினைமுதற் பொருளில்வந்த இகரவிகுதி புணர்ந்து கெட்ட தொழிற்பெயர்.

(பழையவுரை.) உண்டி மிக விரும்பினார்க்கு மிக்க பிணி எளிது, எ-று.

(8) பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி யெளிது.

(ப-ரை.) பெண்டிர் - மனைவியரிடத்து, வெய்யோர்க்கு - (மிக) விருப்பமுள்ளவர்களுக்கு, படு பழி-உண்டாகும் பழி (நிந்தை), எளிது—, எ-று.

(வி-ரை.) மனைவியரிடத்து மிக்க விருப்பங்கொண்டு அவரி னின்று நீங்காதிருப்போர்க்கு உலகநிந்தை யெளிதி லுண்டாகுமெ ன்பதாம். பழி-உலகநிந்தை. பெண்டிர் என்பதில் பெண்மை பகுதி; இஃது இர் ஈற்றுப் பன்மைப் பலர்பாற்பெயர். பெண்மை-அமைதித் தன்மை.

(பழையவுரை.) பெண்டிரை மிக விரும்பினர்க்கு உண்டாகும் பழி எளிது, எ-று.

(9) பாரம்வெய் யோர்க்குப் பாத்தூ ணெளிது.

(ப-ரை.) பாரம் - (தாம் செய்தற்குரிய) கடமையை, வெய் யோர்க்கு-விரும்பியவர்க்கு, பாத்து - (தம்மிடத்துள்ள பொருளைத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்பவர்க்குப்) பகுத்து, ஊண் - (பின்னர்) உண்ணுதல், எளிது—, எ-று.

(வி-ரை.) தமக்குரிய கடமையை நன்குணர்ந்தவர் தம்மிடத் துள்ள பொருளைத் தக்கவாறு பகுத்துண்பா ரென்பதாம். கடமை - உரிமை. பாத்து-பகுத்தென்பதன் விகாரம். ஊண்-முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(பழையவுரை.) பிறர் பாரத்தைத் தாங்குதல் விரும்புவார்க்கு பகுத்துண்டல் எளிது, எ-று.

(10) சார்பி லோருக் குறுகொலை யெளிது.

(ப-ரை.) சார்பு - (போர்முகத்து) உதவிபுரிவோர், இல்லோ ருக்கு - இல்லாதவருக்கு, உறு - நேரிடுகின்ற, கொலை—, எளிது—, எ-று.

(வி-ரை.) உதவியின்றிப் போர்புரிவோர் விரைவி லழிவ ரென் பதாம். சார்பு-தொழிலாகுபெயர். இல்லோர் - எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) நன்னட்பைச் சாராதோர்க்கு, பொருந்திய கொலைத்தொழில் செய்தலெளிது, எ-று.

எளியபத்து முற்றிற்று.

## 9. நல்கூர்ந்த பத்து.

நல்கூர்ந்த - குறிப்புப் பெயரெச்சம்; நல்கூர்தல் - வறுமையடைதல்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
முறையி லரசனுடு நல்கூர்ந் தன்று.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், முறை இல் - நீதியில்லாத, அரசன் நாடு - அரசனது தேசம், நல்கூர்ந்தன்று-வறுமை யுடையதாம், எ-று.

(வி-ரை.) நீதி தப்பிய வரசனது நாடு வறுமையால் வருந்துமென்பதாம் "முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி,யொல்லாது வானம் பெயல்" என்றார் நாயனாரும். நாடு என்பதீண்டு நாட்டிலுள்ளார்க்காதலின் இடவாகுபெயராம்.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து எல்லா மக்கட்கும், முறைமை செய்யா வரசன் நாடு வறுமையுறும், எ-று.

(2) மிகமூத்தோன் காம நல்கூர்ந் தன்று.

(ப-ரை.) மிக மூத்தோன்-வயதால் மிகவும் மூத்தவன், காமம்-காம இன்பத்தை (விரும்புதல்), நல்கூர்ந்தன்று=வறுமை யுடையதாம், எ-று.

(வி-ரை.) வயது மிக்கு உடல் நடுங்கும் இயல்புடைய கிழவன் காம இன்பத்தை அடைதல் ஒருவாற்றானு முடியாமையின் அவனதையடைய விரும்புதல் பயன்படா தென்பதாம். காமமென்பது அதனாலாம் இன்பத்துக்காதலின் கருவியாகுபெயர். விரும்புதல் - சொல்லெச்சம். காமமாவது மகளிரைப் புணர விரும்புதல். மூத்தோன் என்பது "காம நல்கூர்ந்தன்று" எனப் பின்வரும் தொடர்மொழிப் பொருளால் வித்தையால் மூத்தோன், ஜாதியால் மூத்தோன், ஆசிரமத்தால் மூத்தோன் முதலியவர்களை உணர்த்தாது வயதால் மூத்தவனையே உணர்த்திற்று.

(பழையவுரை.) மிக மூத்தான் காமத்திற் றுய்க்கு நுகர்ச்சி வறுமையுறும், எ-று.

(3) செற்றுட னுறைவோனைச் சேர்தனல் கூர்ந்தன்று.

(ப-ரை.) செற்று - பகைத்து, உடன் உறைவோன் ஐ-தன்னுடன் வசிக்கின்றவனை, சேர்தல் - சேர்ந்திருத்தல், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஒருவன் றன்னைப் பகைத்தவனுடன் கூடிவாழ்தல் மிகவுங் கொடிய தென்பதாம். "உடன்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட் பாம்போ டுடனுறைந் தற்று" என்றார் திருவள்ளுவரும். உறைவோன் - வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) தன்னைச் செறுத்தொழுகுவானைச் சென்றடைதல் வறுமையுறும், எ-று. (செறல்-கெடுத்தல்).

(4) பிணிகிடந் தோன்பெற்ற வின்பநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) பிணி கிடந்தோன்-பிணியால் (வருந்திப்பாயிற்) கிடந்தவன், பெற்ற-(உணவு முதலியவற்றால்) அடைந்த, இன்பம்-சுகம், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) பிணியால் வருந்திக் கிடப்பவனுக் கெவற்றானு மக்காலத்தின்ப முண்டாகா தென்பதாம்.

(பழையவுரை.) பிணிபட்ட உடம்பை யுடையான் நுகரும் காமவின்பம் வறுமையுறும், எ-று.

(5) தற்போற் றுவழிப் புலவிநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) தன் போற்றாத வழி - (ஒருவன்) தன்னைப் பாதுகாத்துக்கொள்ளாதவிடத்து, புலவி - பிறரொடு மாறுகொள்ளுதல், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) பாதுகாப்பின்றி யொருவன் பிறரோடு பகைத்தல் கூடா தென்பதாம். போற்றா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தன் என்பது தற் என வருதலேயன்றி யியல்பாயும் வரும்; இது தான் என்பதன் விகாரமொழி.

(பழையவுரை.) தன்மே லன்பாற் போற்றுதார் திறத்துப் புலக்கும் புலவி வறுமையுறும், எ-று. (புலவி-பிணக்கு).

(6) முதிர்வுடை யோன்மேனி யணிநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) முதிர்வு உடையோன் - கிழப்பருவ முடையவன், மேனி - உடம்பின்கண் (தரித்த), அணி - ஆபரணம் (அவனுக்கு), நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) கிழவன் றன்னை யாபரணத்தா லலங்கரித்துக்கொள்ளுத லழகாயிரா தென்பதாம். மேனி என்னும் நிறப்பெயர் அதனை யுடைய வுடம்புக்காதலின் பண்பாகுபெயராம். அணி - செயப்படுபொருண்மையை யுணர்த்து மிகரவிகுதி புணர்ந்துகெட்ட தொழிற்பெயர்; இஃது அணியப்படுவதென்னும் பொருளதாம்.

(பழையவுரை.) மூத்தவுடம்பினை யுடையான் அணியும் அணி வறுமையுறும், எ-று.

(7) சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) சொல் - (ஒருவன் தனது) சொல், செல்லாத வழி - செல்லாதவிடத்து, சொலவு - (தன் குறையைச்) சொல்லுதல், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) தன் குறையைக் கவனித்துக் கேட்காதா ரிடத்தி லொருவன் தனது குறையைச் சொல்லுதல் கூடா தென்பதாம். சொலவு - வுகரவீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) தன் சொற் செல்லாவிடத்துச் சொல்லிய சொல் வறுமையுறும், எ-று.

(8.) அகம்வறி யோனண்ண னல்கூர்ந் தன்று.

(ப-ரை.) அகம் - மனதின்கண், வறியோன் - அன்பில்லாத வனை, நண்ணல் - (ஒருவன் சிநேகிதமாக) அடைதல், நல்கூர்ந் தன்று—, எ-று.

(வி-ரை.) அன்பில்லாதாரைச் சிநேகித்தல் துன்பத்திற் கிட மாமென்பது.

(பழையவுரை.) மனத்தில் நன்மையின்றி வறியானொருவனைச் சென்று நண்ணுதல் வறுமையுறும், எ-று.

(9) உட்கில் வழிச்சின நல்கூர்ந் தன்று.

(ப-ரை.) உட்கு-(தன்னைக்கண்டு பிறர்) அஞ்சுதல், இல் வழி - இல்லாதவிடத்து, சினம்-(ஒருவன்) கோபித்தல், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஒருவன் றன்னின் மிக்காரு மொப்பாரு முள்ள விடத்துக் கோபித்தல் துன்பத்திற் கிடமாமென்பது. உட்கு - முதனிலைத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) மதியாதார்முன் வெகுளும் வெகுட்சி வறுமையுறும், எ-று.

(10) நட்பில் வழிச்சேற னல்கூர்ந் தன்று.

(ப-ரை.) நட்பு இல் - (தனக்குச்) சிநேகித ரில்லாதவிடத்து, சேறல் - (ஒருவன்) செல்லுதல், நல்கூர்ந்தன்று—, எ - று.

(வி-ரை.) சிநேகித ரில்லாதவிடத்தி லொருவன் செல்லுதல் துன்பத்திற் கிடமாமென்பது. நட்பு-பண்பாகுபெயர். சேறல்-செல்தல் எனப் பிரிபடும்.

(பழையவுரை.) தன்னொடு நண்பில்லாதார் மாட்டு ஒன்றனை நச்சிய நசை வறுமையுறும், எ-று.

நல்கூர்ந்தபத்து முற்றிற்று.

## 10. தண்டாப்பத்து.

நீங்காதபத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓங்கல் வேண்டுவோ னுயர்மொழி தண்டான்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், ஓங்கல்-(மேன்மேலும்) விருத்தியாதலை, வேண்டுவோன் - விரும்புகின்றவன், உயர் மொழி - (அறிவுடையோர் கூறும்) உயர்வாகிய சொற்களை, (மறுக்காது கேட்டலினின்றும்), தண்டான் - நீங்கான், எ - று.

(வி-ரை.) அறிவுடையோர் சொற்படி நடப்பவன் மிகவும் விருத்தியாவ னென்பதாம். வேண்டுவோன் - வினையாலணையும்பெயர். உயர்மொழி-பண்புத்தொகைநிலைத்தொடர்; உயர்ந்த மொழியெனக் கொள்ளுங்கால் வினைத்தொகைநிலைத்தொடராம்.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து எல்லாமக்களுள்ளும் உயர்வு வேண்டுவோன் பிறரை உயர்த்துச்சொல்லும் மொழிகளை மாறான், எ - று. (தண்டுதல் - மறுத்தல், விளக்குதல்).

(2) வீங்கல் வேண்டுவோன் பலபுகழ் தண்டான்.

(ப-ரை.) வீங்கல் வேண்டுவோன்-(எவ்விடத்துந் தனதுபெயர்) பரவுதலை விரும்புகின்றவன், பல புகழ்-பலவகைப்பட்ட புகழினின்றும், தண்டான்—, எ - று.

(வி - ரை.) பிரசித்தமான பெயரையுடையவன் யாவரானும் புகழப்படுபவனு யிருப்பா னென்பதாம். புகழ் : ஈகை, கல்வி முதலியவற்றால் உண்டாவதா யிருத்தலின் 'பலபுகழ்' எனக் கூறினர். வீங்கல் - அல் ஈற்றுத் தொழிற்பெயர். புகழ் என்னுமிடத்து நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுருபு தொக்குநின்றது.

(பழையவுரை.) ஆக்கத்தை வேண்டுவோ னொருவன் தனக்குப் பல புகழ்வருஞ் செய்கைகளை யொழியான், எ - று. (ஆக்கம் - செல்வம்.)

(3) கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.

(ப-ரை.) கற்றல்-(நல்லாசிரியரிடத்து நல்ல நூற்களைப்) படித்தலை, வேண்டுவோன் - விரும்புகின்றவன், வழிபாடு-(அவரை) வழிபடுதலினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) கல்வியறிவுடையனாக விரும்புவோன் தனது ஆசிரியரைத் தவறாது வழிபடுவனென்பதாம். "வழிபடுவோனே, உரைகோளாளற்கு உரைப்பது நூலே" என்று நன்னூலிலும், முதுமொழிக்காஞ்சி சிறந்தபத்தில் 'கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று' என்றதனாலுமறிக. கற்றல்-தல்லீற்றுத் தொழிற்பெயர். வழிபாடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(பழையவுரை.) ஒன்றனைக் கற்றல் விரும்புவோன் தன்னைக் கற்பிக்கும் ஆசிரியர்க்குச் செய்யும் வழிபாடு ஒழியான், எ - று. (வழிபாடு - தொண்டு.)

(4) நிற்றல் வேண்டுவோன் றவஞ்செய றண்டான்.

(ப-ரை.) நிற்றல் - (வெகுகாலந் தனது சரீரங் கெடாது) நிலைபெறுதலை, வேண்டுவோன் - விரும்புபவன், தவஞ்செயல் - தவஞ்செய்தலினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) உலகத்தில் வெகுகால மிருக்க விரும்புவோன் றவத்தையே விரும்பிச் செய்வனென்பதாம். தவஞ்செயல் - ஆக்கப்பொருளில் வந்த இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

(பழையவுரை.) பிறப்பினைக்கெடுத்துத் தன்னை நிலைப்பிக்க வேண்டுவோன் தவஞ்செய்த லொழியான், எ - று. (தவம்-நோன்பு.)

(5) வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.

(ப-ரை.) வாழ்க்கை-(செவ்வையாக) வாழ்தலை, வேண்டுவோன்-மேன்மேல் விரும்புபவன், சூழ்ச்சி-(அதற்குரிய) ஆலோசனையினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) பலர் மதிக்க வாழவிரும்புவோன் அதற்குரிய ஆலோசனையினின்று நீங்கானென்பதாம். "தூக்கிவினைசெய்", "நுண்ணிய கருமமு மெண்ணித் துணி" என்றார் ஒளவையாரும். சூழ்ச்சி - தொழிற்பெயர்; இதன் விகுதி சி.

(பழையவுரை.) வாழ்தலை மேன்மேலும் விரும்பிய ஒருவன் தான் எடுத்த தொழிலை யாராய்த லொழியான், எ - று.

## (6) மிகுதி வேண்டுவோன் றகுதி தண்டான்.

(ப-ரை.) மிகுதி-(தேகப்) பொலிவை, வேண்டுவோன்-விரும்புபவன், தகுதி - (அதற்குத்) தகுதியாகவுள்ள வுணவுமுதலியவற்றினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) அழகுடையவனாக விரும்புவோன் நல்லுணவுண்டல், நல்லாடை தரித்தல் முதலியவற்றினின்று நீங்கானென்பதாம். பொலிவு-அழகு. தகுதி-பண்பாகுபெயர்.

(பழையவுரை.) "மிகுதி வேண்டுவோன் வருத்தந் தண்டான்" என்பதும் பாடம். அளவுக்கு மிக்க பொருளை வேண்டுவோன் முயற்சி வருத்தமென நீங்கான், எ - று.

## (7) இன்பம் வேண்டுவோன் றுன்பந் தண்டான்.

(ப-ரை.) இன்பம்-(முன்னே) இன்பத்தை, வேண்டுவோன்-விரும்புபவன், துன்பம்-(பின்னே) துன்பமடைதலினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) முன் இன்பத்தை விரும்புவோன் பின் துன்பத்தினின்றும் நீங்கானென்பதாம். "நாய்போ லுழைத்தால் அரசன்போல் வாழலாம்" என வழங்கும் பழமொழியையுங் காண்க.

(பழையவுரை.) இன்பத்தை விரும்பிய ஒருவன், துன்பத்தைத் துன்பமென்று களையான், எ - று.

(8) துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான்.

(ப-ரை.) துன்பம் - (முன்னே) துன்பத்தை, வேண்டுவோன்- விரும்புபவன், இன்பம்-(பின்னே) இன்பத்தினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) முன்பு துன்பத்தை விரும்புவோன் பின்பு இன்பத்தினின்றும் நீங்கானென்பதாம்.

(பழையவுரை.) துன்பத்தை விரும்பிய ஒருவன் இன்பத்தை இன்பமென்று களையான், எ-று.

(9) ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான்.

(ப-ரை) ஏமம் - (தனக்குக்) காவலை, வேண்டுவோன் - விரும்பிய அரசன், முறைசெயல் - (நீதிநூல்களிற் கூறிய) முறைப்படி அரசாட்சி நடத்துதலை, தண்டான்—, எ - று.

(வி-ரை.) தனது நாட்டுக்குடிகளுக்கு இன்பஞ்செய்ய விரும்பிய அரசன் முறைமைப்படி நீதி நடத்துவன் என்பதாம். முறை - பண்பாகுபெயர்; இதனது பகுதிப்பொருள் விகுதியாகிய மை தொக்குநின்றது.

(பழையவுரை.) குடிகளைக் காக்க விரும்பிய அரசன் முறைமைப்படி நடத்தலொழியான், எ-று. (ஏமம் - இன்பம்.)

(10) காமம் வேண்டுவோ னின்பந் தண்டான்.

(ப-ரை.) காமம் வேண்டுவோன் - மகளிரது புணர்ச்சியின்பத்தை விரும்புகின்றவன், இன்பம் - (அம்மகளிரிடத் துண்டாகும்) இன்பத்தினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) மங்கையர் புணர்ச்சியில் கருத்துடையவன் அவர் தரும் சுகத்தைவிட்டு நீங்கான் என்பதாம். காமம் துன்பம் என்பன பால்பகா அஃறிணைப்பெயர்கள். தண்டான் - தெரிநிலை எதிர்மறை வினைமுற்று.

இதற்குப் பழையவுரை கிடைக்கவில்லை.

தண்டாப்பத்து முற்றிற்று.

---

முதுமொழிக்காஞ்சி மூலமும் உரையும்

முற்றிற்று.

---

Ripon Press.